பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 30 செவ்வாய்க்கிழமை 14.07.2020 கதிர் 118

## கொரோனா 2,651

கொழும்பு, ஜூலை 14

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்ந்தும் அதிகரித்து வரும் நிலையில் மேலும் 5 புதிய தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்

2

# வலுவான அணுகுமுறையை இலங்கை மீது கைக்கொள்க!

### ஏழு சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் ஐ.நா. மனித உரிமை சபையில் வலியுறுத்தல்

ஜெனிவா, ஜூலை 14

இலங்கையில் பொறுப்புக்கூறல் விடயத்தில் இன்னமும் வலுவான அணுகுமுறைகளைப் பிரயோகிப்பது மிக அவசியமானது என 7 சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் ஜெனிவாவில் வலியுறுத்தியுள்ளன.

2

## தேர்தல் கடமைகளில் இராணுவம் ஈடுபடாது

### பொலிஸார் மட்டுமே பணிபுரிவர் என்கிறார் மஹிந்த தேசப்பிரிய



(ந.லோகதயாளன், டிலக்சன், நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 14

தேர்தல் நடவடிக்கைகளில் ஒருபோதும் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படமாட்டார்கள். பொலிஸார் மாத்திரமே தேர்தல் கடமையில் ஈடுபடுவார்கள் எனத் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

2

## இந்தியாவில் இருந்து வரும் யாரையும் அனுமதிக்காதீர்!

### மன்னார் அரச அதிபர் கோரிக்கை

மன்னார், ஜூலை 14

இந்தியாவில் இருந்து எவரும் கடல் மார்க்கமாக இலங்கைக்கு வருவதற்கு அனுமதிக்கக்கூடாது. இந்திய ட்ரோலர் படகுகளை இலங்கை கடல் எல்லைக்குள் கூட வர அனுமதி வழங்க வேண்டாம் எனக் கடற்படை அதிகாரியிடம் மன்னார் அரச அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் கோரியுள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

2

## வெளியே செல்வதை தவிருங்கள்

கொழும்பு, ஜூலை 14

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்து வருகின்றமையால் மக்கள் அநாவசியமாக வெளியே செல்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டுமென இலங்கை மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவரும் நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணருமான பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் சடுதியாக

2

## 150 ஆசனங்களை பெரமுன வெல்லும்

### பிரசன்ன ரணதுங்க கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 14

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 150 ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பியகமவில் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசார நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர், அரசமைப்பில் மாற்றங்களை கொண்டுவர நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரம் தேவை என்று குறிப்பிட்டார்.

கடந்த 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு எட்டு ஆசனங்கள் கிடைத்தது என்றும் அமைச்சர் இதன் போது குறிப்பிட்டார்.

கடந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்

2

## 20 கிலோ கஞ்சாவுடன் இரண்டு பேர் சிக்கினர்



யாழ்ப்பாணம், ஜூலை 14

சாவகச்சேரி நகரில் கைமாற்றுவதற்காகக் கொண்டு வரப்பட்ட 20 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதோடு இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2

## கொரோனாத் தரவுகள் அரசினால் இருட்டடிப்பு

### கிரியெல்ல குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 15

கொரோனா வைரஸ் தொடர்பான தரவுகளை அரசு மறைத்து வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளர் லக்ஸ்மன் கிரியெல்ல குற்றம் சாட்டியுள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், தேர்தலில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக கொரோனா வைரஸ் நிலைமை தொடர்பான உண்மையை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

ஜூலை 13ஆம், 14 ஆம், 15 ஆம் திகதி முன்னெடுக்கவிருந்த

2




## கைதடி சித்த ஆயுர்வேத பீடத்தின் மாணவிக்கு கொரோனா அறிகுறி!

### யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை 14

கைதடி சித்த ஆயுர்வேத பீடத்தில் கல்வி கற்கும் மாணவியொருவர் கொரோனா தொற்று சந்தேகத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் சித்த ஆயுர்வேத பீடத்தில் கல்வி கற்கும் பொலன்னறுவையை சேர்ந்த மாணவியொருவரே அனுமதிக்கப்பட்டுள்ளார்.

2 நாள்களாகக் காய்ச்சல் மற்றும் சில அறிகுறிகளையடுத்து கொரோனா சந்தேகத்தில் இன்று யாழ். போதனா வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

2

## சாரதி லைசென்ஸ் சலுகைக் காலம் மேலும் நீடிப்பு

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் பரவிவிடும் என்ற அச்சத்தில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் தேவையற்ற நெரிசல் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாத்திரம் சுமார் 3,500 பேர் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு அங்கு வந்திருந்தனர் என அந்தத் திணைக்களம்

2

## இந்தியாவில் இருந்து .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் மாவட்ட அரச அதிபர் சி.ஏ. மோகன்றாஸ் தலைமையில் இடம் பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர், பொலிஸ், கடற்படை அதிகாரிகள், அழைக்கப்பட்ட திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மன்னார் மாவட்ட அரச அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் -

நாட்டில்தற்போதுகொரோனாவைரஸ் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் மன்னார் மாவட்டத்தில் 14 நபர்கள் தனிமைப்படுத்தும் நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

எமதுமாவட்டத்திலும்நோய்பரவாமல் இருப்பதற்கான தற்காப்பு தொடர்பான ஆயத்த கூட்டம் இன்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அறிக்கையின்படி எங்களுடைய மாவட்டத்தில் இதுவரை ஆபத்தான நிலைமை ஏற்படவில்லை.

கடற்படை அதிகாரிக்கு நான் இறுக்கமான அறிவுறுத்தல் வழங்கினேன்.

இந்தியாவில் இருந்து எவரும் கடல் மார்க்கமாக இங்கே வருவதற்கு அனுமதிக்கக்கூடாது. இந்திய ட்ரோலர் படகுகளை இலங்கைக் கடல் எல்லைக்குள் கூட வர அனுமதிக்கவேண்டாம் என்று நாங்கள் கேட்டுக்கொண்டோம்.

அதற்கு மேலதிகமாக பிரதேச செயலாளருக்கும் அறிவுறுத்தல் வழங்கி உள்ளோம். இவ்விடயம் தொடர்பாக பிரதேச மட்டத்திலும் கூட்டங்களை நடத்துமாறு கோரியுள்ளோம்.

நோய்க்கட்டுப்பாடுகளைமேற்கொள்ள சுகாதார அதிகாரிகளுடன் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுக்க உரிய தரப்பினருக்கு கோரியுள்ளோம். இதன்போது இணைந்து செயற்படுவதாக இன்றைய கூட்டத்தில் தீர்மானித்துள்ளோம் - என்றார்.

## கொரோனாத் தரவுகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுத்தேர்தல்பிரசார நடவடிக்கைகளை நிறுத்தி வைப்பதாக பொதுஜன பெரமுன அறிவித்துள்ளபோதும் இந்த முடிவின் பின்னணியில் உள்ள உண்மையை அவர்கள் சுட்டிக்காட்டவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே பொதுத்தேர்தல் பிரசார நடவடிக்கைகளை நிறுத்தியமைக்கான உண்மையான காரணத்தை இந்த அரசு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றும் லக்ஸ்மன் கிரியெல்ல கூறினார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தின் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக அரசின்ஒருபகுதியினர்கூறியிருந்தாலும், அரசால் அறிவிக்கப்படும் தற்போதைய தரவு தொடர்பான உண்மைத்தன்மை தொடர்பாக கேள்வியெழுந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## 20 கிலோ கஞ்சாவுடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்துக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்றிரவு 7.30 மணியளவில் இந்தக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது, திருகோணமலையைச் சேர்ந்த ஒரு வரும், சாவகச்சேரியைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## கைதடி சித்த .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, நேற்று கொரொனா அறிகுறியுடன் எழுவைதீவிலிருந்து அனுமதிக்கப்பட்ட பொலனறுவையைச் சேர்ந்தவருக்குக் கொரோனா தொற்று ஏற்படவில்லையென்பது தெரிய வந்துள்ளது.

## தேர்தல் கடமைகளில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு நாள் பயணமாக வடக்குக்கு விஜயம்மேற்கொண்டதேர்தல்ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, இன்று யாழ்.மாவட்ட செயலகத்துக்கு விஜயம் மேற்கொண்டு உதவித் தேர்தல் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடியதோடு அரச அதிபர், மேலதிக அரச அதிபர்கள் மற்றும் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் உட்பட்ட அதிகாரிகளுடன்சந்திப்புமேற்கொண்டார். அதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடும் போது வடக்கில் சில தேர்தல் விதிமுறை மீறல்கள் அதிகமாக இடம்பெறுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. அதாவது வீதிகளில் வேட்பாளர்களின் இலக்கங்கள் மற்றும் சின்னங்கள் எழுதப்படுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அது நிறுத்தப்படவேண்டும்.

அத்தோடு இங்கே அரச நிதியில் அமைக்கப்படும் வீதிகள் சில வேட்பாளர்களினால் திறப்பு விழாக்கள் செய்யப்பட்டு திறக்கப்படுகின்றன. அதனை உடனடியாக நிறுத்தும்படி நான் உத்தரவு பிறப்பித்திருக்கின்றேன். அவ்வாறான அனைத்து திட்டங்களின் முன்பாக மக்களின் வரிப் பணத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டம் என பெயர்ப் பலகை நாட்டவேண்டும்.

அத்தோடு தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் வாக்களிப்பது தொடர்பாக நாம் ஆணைக்குழுவில் ஆராய்ந்து வருகின்றோம். அது தொடர்பில் விரைவில் அந்த அறிவித்தல் வரும். அதே போல வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்குள்ளாக்கப் பட்டுள்ளவர்கள் தேர்தல் தினத்தன்று மாலை 4 தொடக்கம் மாலை 5 மணி வரை வாக்களிப்பு நிலையம் சென்று வாக்களிப்பை மேற்கொள்ள முடியும்.

அண்மையில் ஒரு வேட்பாளர் 75 கள்ள வாக்குகள் போட்டமை எமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளன. அது தொடர்பில் ஆணைக்குழுவில் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

தேர்தல் கடமைகளில் பொலிஸார் மாத்திரமே ஈடுபடுத்தப்படுவார்கள். இராணுவத்தினர் எக்காரணத்துக்காகவும் கடமையில் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள். அதாவது எமக்கு ஒரே ஒரு விடயத்துக்குத் தான் இராணுவத்தின் உதவி தேவைப் படுகின்றது. அதாவது தீவுப் பகுதிகளில் இருந்து விரைவாக வாக்குப் பெட்டிகளை வாக்குச்சேகரிப்பு நிலையத்துக்கு எடுத்து வருவதற்கு விமானப்படை மற்றும் கடற்படையினரின் உதவி தேவையாக உள்ளது. எனவே வாக்குப்பெட்டிகள் வாக்கெண்ணும் நிலையத்திற்கு எடுத்துச் செல்லும் பணியில் மட்டும் இராணுவத்தினர் பயன்படுத்தப்படுவார்கள். தேர்தல் கடமைகள் அனைத்திலும் பொலிஸார் மாத்திரமே கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

அத்தோடு தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பில் ஒருவரைக் கைது செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு மாத்திரமே உள்ளது. அதனை வேறு எவரும் மேற்கொள்ள முடியாது - என்றார்.

## வெளியே செல்வதை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரித்துள்ளமை தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கொரோனா வைரஸ் தொற்று, கடந்த மார்ச் மாதமளவில் நாட்டில் பரவ ஆரம்பித்தபோது, உடனடியாக பொது முடக்கம் அமுல்படுத்தப்பட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

எனினும் மீண்டும் இம்மாத ஆரம்பத்தில் வெலிக்கடை சிறைச்சாலையில் கைதியொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் தற்போது, கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வளித்தல், இராஜாங்கனைப்பகுதி ஆகியவற்றில் பெருமளவானோர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருப்பதாக அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

இவைகளை அவதானிக்கின்றப் போது, நாட்டில் வைரஸ் பரவலின் இரண்டாம் அலை ஏற்படுவதற்கு வாய்ப்பு காணப்படுகின்றது.

எனவே அநாவசியமாக வெளியே செல்வதை மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அதாவது எதிர்வரும் வாரங்களில் நீங்கள் வீட்டைவிட்டு வெளியே செல்வதாயின் ஒன்றுக்கு இரண்டு முறை சிந்தித்து செயற்படுங்கள் - என்றார்.

## 150 ஆசனங்களை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பு 97 இடங்களை பெற்றுக் கொண்டது என்றும், தற்போது 150 இடங்களைப் பெற்றுக்கொள்ள கம்பஹா மக்கள் பொதுத் தேர்தலில் மேலும் ஐந்து உறுப்பினர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## கொரோனா ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஓமான் நாட்டில் இருந்து நாடு திரும்பியவர்களில்மேலும்3பேருக்குகொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இராஜங்கனை மற்றும் பொலனறுவை லங்காபுர பிரதேசங்களைச் சேர்ந்த மேலும் இருவருக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சு சற்று முன்னதாக அறிவித்துள்ளது.

இதையடுத்து கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களது மொத்த எண்ணிக்கை 2651 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களில் மேலம் 7 பேர் இன்று குணமடைந்து வெளியேறியுள்ளதை அடுத்து இதுவரை பூரணமாக குணமடைந்து வீடுகளுக்குச் சென்றுள்ளவர்களின் எண்ணிக்கை 1988 பேராக உயர்வடைந்துள்ளது.

## வலுவான அணுகுமுறையை ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 44 ஆவது கூட்டத்தொடரில் அமைதியான முறையில் சுதந்திரமாகக் கூடுவதற்கும் கலந்துரையாடுவதற்குமான உரிமை பற்றி ஐ.நா விசேட அறிக்கையாளரினால், அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், சிறுபான்மையினச் சமூகங்களின் உரிமைகளுக்கான சர்வதேசக்குழு, மனித உரிமைகளுக்கான சர்வதேச சேவைகள் உள்ளிட்ட 7 மனித உரிமை அமைப்புக்கள் இணைந்து கூட்டறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

அந்த அறிக்கையிலேயே இலங்கை தொடர்பாக இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஐ.நா.விசேட அறிக்கையாளரினால் சுட்டிக்காட்டப்பட்டதைப் போன்றே இலங்கையில் சிவில் சமூகச் செயற்பாடுகளுக்கான இடைவெளி வேகமாகச் சுருங்கி வருகின்றது.

மேலும் சிவில் சமூக அமைப்புக்கள், இராணுவத்தினரின் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், விசாரணைகளுக்கு அதிகளவு உட்படுத்தப்படுகின்றன.

இந்நிலையில் தற்போது, கொரோனா வைரஸ் அச்சுறுத்தலின் ஊடாக கருத்துச்சுதந்திரம், அமைதியான முறையில் கூடுவதற்கான சுதந்திரம் ஆகியவற்றின் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு அரசுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

அத்துடன் சமூகச் செயற்பாட்டாளர்கள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

அமைதியாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது கட்டற்ற அடக்குமுறை பிரயோகிக்கப்படுகின்றமையை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இந்நிலையில் இலங்கையின் சிவில் சமூக மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் பகிரங்கமாகப் கருத்து வெளியிடக்கூடிய ஒரே தளமாக ஐ.நா. மனித உரிமைகள் சபை காணப்படுகிறது.

ஆகவே இலங்கையில் பொறுப்புக் கூறல் உறுதிப்படுத்தப்படுவதைக் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அவதானிக்கவேண்டும்.

மேலும் இலங்கை விவகாரங்களில் வலுவான அணுகுமுறைகளைப் பின்பற்றுவது அவசியம் - என்றுள்ளது.

## 10,000 பிளாஸ்ரிக் போத்தல்கள் மீட்பு



பேருவளை கடற்கரைப் பகுதியிலிருந்து, சுமார் பத்தாயிரம் வெற்று பிளாஸ்ரிக் குடிதண்ணீர் போத்தல்களை சேகரித்துள்ளனர் என பேருவளை நகரசபை செயலாளர் அசோக்க ரணசிங்க தெரிவித்தார். நாட்டில் நிலவிவரும் மழையுடன் கூடியவானிலையைக்கருத்திற்கொண்டு, பேருவளை நகரசபைக்குட்பட்ட பகுதிகளில், டெங்கு நுளம்பு பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில், பேருவளை நகர சபையால் மேற்கொள்ளப்பட்ட சுத்திகரிப்பு நடவடிக்கைகளின் போதே, பத்து உழவு இயந்திரங்களில் இவை சேகரிக்கப்பட்டுள்ளன.

## பிரசாரத்தின் நடுவில் காலமான தொண்டர்

தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பிரதேசசபை உறுப்பினர் ஒருவர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஊர்காவற்றுறை பகுதியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஊர்காவற்றுறை பிரதேசசபை உறுப்பினரான கனகசுந்தரம் ஜெயக்குமார் என்பவரே உயிரிழந்தார்.

இன்று இலங்கை தமிழ் அரசு கட்சியினர் ஊர்காவற்றுறை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வீடுவீடாக பிரச்சார பணியில் ஈடுபட்டனர். பிரசார பணியில் ஈடுபட்டிருந்த பிரதேசசபை உறுப்பினர் ஜெயக்குமார் திடீர் நெஞ்சுவலி ஏற்பட்டு, உடனடியாக ஊர்காவற்றுறை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் பட்டார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## சாரதி லைசென்ஸ் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையொன்றை வெளியிட்டுத் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், காலவதியாகும் சாரதி அனுமதி பத்திரங்களுக்கு மேலும் 3 மாதங்கள் சலுகை காலம் வழங்க போக்குவரத்துதிணைக்களம்நடவடிக்கை எடுத்துள்ளது.

2020 இலக்கம் 06இன் கீழான மோட்டார் வாகன அறிவித்தலின்படி, 2020.03.16 முதல் 2020.06.30 வரையான காலப்பகுதியில் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு 06 மாதங்கள் சலுகை காலம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2020.07.01 முதல் 2020.09.30 வரையான காலப்பகுதியில் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு 03 மாதங்கள் சலுகை காலம் வழங்கப்பட்டுள்ளது.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பயனற்ற தீர்மானங்கள்

இலங்கையில் பொறுப்புக் கூறல் விடயத்தில் இன்னமும் வலுவான அணுகுமுறைகளைப் பிரயோகிப்பது அவசியமானது என ஏழு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 44 ஆவது அமர்வுதற்போது ஜெனீவாவில் நடைபெற்று வருகின்றது.

அதில் 'அமைதியான முறையில் சுதந்திரமாக ஒன்று கூடுவதற்கும் கலந்துரையாடுவதற்குமான உரிமை' தொடர்பில் ஐ.நா. விசேட அறிக்கையாளரினால் விவரமான அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் இலங்கை தொடர்பாகச் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களை ஒட்டியே சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கின்றன.

இலங்கையில் இடம்பெற்ற மோசமான யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் குறித்து சர்வதேச நியமங்களின் அடிப்படையில் நீதியான விசாரணை நடத்தி, பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, குற்றமிழைத்தோரை சட்டத்தின் முன் நிறுத்தும்படி இதே ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அங்கத்துவ நாடுகள் அனைத்தும் சேர்ந்து ஏகமனதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றி வருடங்கள் பல கடந்து விட்டன.

இரண்டு தடவைகள் இரண்டு, இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்ட நிலையில் உருப்படியாக எதுவுமே நடைபெறவில்லை.

ஒரு புறம் தன்னிச்சையாக இந்தத் தீர்மானங்களில் இருந்து வெளியேறி விட்டதாக அதே ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தோற்றிப் பகிரங்கமாக இலங்கை அறிவித்து விட்டது.

மறுபுறம், யுத்த காலத்தில் வழங்கப்பட்டு வந்த - குற்றத்திலிருந்து விலக்களிப்பு வழங்கும் சிறப்புரிமையை - படைத்தரப்பு அனுபவிக்கும் கொடூர நிலை தொடர்கின்றது.

கொலை போன்ற மோசமான குற்ற நடவடிக்கைக்காக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்ட படைத் தரப்புக்கு பொது மன்னிப்பு வழங்கும் அநாகரிகக் கலாசாரமே பொதுப் பண்பியல்பாக வளர்ந்து வருகின்றது.

இதே ஆட்சியாளர்களின் முன்னைய பத்து வருட இருண்ட யுக ஆட்சியிலும் சரி, இப்போது ஏழு மாதகள் கடந்திருக்கும் ஆட்சியிலும் சரி, படையினருக்கு எதிரான மனித உரிமை மீறல் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை. மாறாக, அப்படி ஆரம்பிக்கப்பட்ட சட்ட விசாரணைகளில் இருந்து அவர்களை விடுவிக்கும் போக்கே காணப்படுகின்றது.

யுத்தம் முடிந்து ஒரு தசாப்த காலம் தாண்டிய பின்னர் இப்போது ஆட்சி முறையில் புதிய - விநோத - கலாசாரம் முன்னெடுக்கப்படுகின்றது.

சிவில் நிர்வாக அதிகாரிகளின் இடங்களுக்கெல்லாம் ஒன்றில் சேவையில் இருக்கும் படை அதிகாரிகள் அல்லது ஓய்வு பெற்ற படை அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றார்கள். எண்ணுக் கணக்கின்றித் தொடரும் இந்த நிலைமையால் அரச நிர்வாகம் இராணுவக் கட்டமைப்பு வடிவத்துக்கு மாறி வருகின்றது.

எதிர்காலத்தில் ஜனநாயக உரிமைகள், கருத்து வெளியிடும் சுதந்திரம், ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் போன்றவற்றை இந்தச் சூழ்நிலை பேராபத்துக்குள் மூழ்கடிக்கும் சூழ்நிலையே இப்போது கட்டவிழ்ந்து வருகின்றது.

மேற்படி ஜெனீவாக் கூட்டத்தில் 'வலுவான அணுகுமுறையை இலங்கை மீது கைக்கொள்ள' என்ற பாணியிலான அறிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலம் எதுவும் சாதித்து விட முடியாது.

ஏற்கனவே யுத்தத்தின் இறுதிக் காலத்தில் இடம்பெற்ற யுத்தக்குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறல் பொறிமுறையை நடைமுறைப்படுத்த வலியுறுத்தி கவுன்ஸிலின் அங்கத்துவ நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானங்கள் எந்த விதப் பயனையும் ஏற்படுத்தாத நிலையில் - தாக்கத்தையும் உருவாக்காத சூழலில் - குப்பைக் கூடைக்குள் தூக்கி வீசப்பட்டவையாகியிருக்கின்றன.

இந்தப் பின்புலத்தில் பார்த்தால், இப்போது ஏழு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் சேர்ந்து வலியுறுத்தியிருக்கும் கோரிக்கை தீர்மானம் கூட வெறுமனே கறுப்பு வெள்ளைக் கடதாசியில் பதியப்பட்ட வாசகங்களே. அவற்றால் பயனேதும் கிடைக்கும் என நம்புவதற்கு நம் பட்டறிவில் சாதகமான அம்சங்கள் ஏதும் இல்லை என்பதே உண்மை.

# தொழிலாளர்களின் சம்பளம் உயர்த்தப்படாமைக்கு மைத்திரியும் ரணிலுமே பொறுப்பு என்கிறார் சஜித்



கொழும்பு, ஜூலை 14

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாள் கூலியை அதிகரிக்க விடாமல் செய்தமைக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரியும் அப்போதைய பிரதமர் ரணிலுமே பொறுப்புக் கூற வேண்டுமென, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

ஊடகப் பிரதானிகளைக் கோல்பேஸ் ஹோட்டலில் நேற்றுக் காலை சந்தித்துக் கலந்துரையாடும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நீங்கள் அமைச்சராக இருந்தபோது, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் 50 ரூபாய் சம்பள அதிகரிப்பை அமைச்சரவையில் பெற்றுக்கொடுக்க முடிந்திருக்கவில்லை. அப்படியிருக்கையில் என்ன அடிப்படையில் 1,500 ரூபாய் நாள் கூலி வழங்குவேன் என உறுதியளித்தீர்கள்? எனக் கேட்கப்பட்டபோது–

அப்போதைய அமைச்சரவையில் நானும், அமைச்சர்களான மனோ கணேசன், திகாம்பரம், ராஜித சேனாரத்ன போன்றவர்களுமே பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பை வலியுறுத்திச் சண்டை பிடித்தோம். ஆனால், துரதிர்ஷ்டவசமான அச்சம்பள அதிகரிப்புச் சாத்தியப்படவில்லை.

"இதனைப் பெற்றுக்கொடுப்பதில் முட்டுக்கட்டையாகச் செயற்பட்டவர்கள் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும்தான். அவர்கள்தான் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் சம்பள அதிகரிப்பு ஆயிரமா, ஆயிரத்தி ஐநூறா என்பதல்ல முக்கியம். பெருந்தோட்ட மக்களின் பொருளாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்து, தோட்டத்துறையை மேம்படுத்துவதனூடாகவே அங்குள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும்.

"அந்நிலையை உருவாக்கினால், 1,500 ரூபாய் சம்பளம் என்பதே தேவைப்படாது. அனைவரும் பொருளாதாரத் திருப்தியுள்ளவர்களாக மாறிவிடுவார்கள் என, சஜித் பிரேமதாஸ மேலும் கூறினார்.

# தொழிற்சங்கப் பிரமுகர்கள் இடையே ஹட்டனில் ரகளை; ஒருவர் படுகாயம்



தொழிலாளர் தேசிய சங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் இருவருக்கிடையிலான மோதல் உக்கிரமடைந்துள்ள நிலையில் நேற்று அடிதடியும் அரங்கேறியுள்ளது. இதனால் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் இளைஞர் அணித் தலைவர் சிவநேசனுக்கும், பத்தாவுக்குமிடையிலேயே இவ்வாறு கடும் மோதல் மூண்டுள்ளது.

நிதி கொடுக்கல் – வாங்கல் தொடர்பில் ஏற்பட்டிருந்த முரண்பாடு காரணமாகவே இம் மோதல் இடம்பெற்றுள்ளது என்று ஹட்டன் பொலிஸில் முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.

ஹட்டன் காசல்ரீயிலுள்ள விடுதியொன்றில் நேற்று முக்கிய கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது. இதில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி தலைவர் உதயகுமாரும் கலந்துகொண்டுள்ளார்.

சிவநேசனுக்கும், பத்மாவுக்குமிடையில் நிதி கொடுக்கல், வாங்கல் தொடர்பில் ஏற்பட்டிருந்த சர்ச்சைக்கு முடிவு கட்டி, சமரசத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது எனவும் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் இந்தச் சந்திப்பில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து சங்கத்தின் பிரதித் தலைவர் உதயகுமார், பத்மாவை அழைத்துக்கொண்டு வெளியில் வந்துள்ளார்.

அவ்வேளையில் சிவநேசன் தரப்பால் கல்வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும், இதனால் பத்மாவின் சாரதி படுகாயமடைந்தார் எனவும் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிவநேசன் கத்தியை காட்டி மிரட்டினார் எனவும் பத்மா தரப்பால் முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கட்சி தலைமைப்பீடத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்குக் கடிதம்

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்தவர்கள் வெளியில் வந்து தெரிவிக்கும் கருத்துக்கள் மூலம் சில வேட்பாளர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டி அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இதனைத் தெரிவித்துள்ளார்.

எனவே, அவ்வாறான செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த சந்தர்ப்பம் உள்ளதா எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் வினவியுள்ளார்.

அவ்வாறான சந்தர்ப்பம் காணப்படுமாயின் உடனடியாக அதற்கான நடைமுறைகளை பின்பற்றுமாறும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் கேட்டுள்ளார்.

## சிறைக் கைதிகளை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவது நிறுத்தம்

சிறை கைதிகளை நீதிமன்றின் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. வழக்கு விசாரணைகள் வீடியோ தொழில்நுட்பத்தின் (காணொலியின்) மூலம் நடத்தப்படும்.

சிறைச்சாலைகளுக்கு இடையில் கைதிகளின் இடமாற்றமும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

# புற்றுநோய் அணுக்களை மஞ்சள் திறம்பட அழிக்கும்!

உடலில் உள்ள ஆரோக்கியமான அணுக்களுக்குச் சேதம் விளைவிக்காமல் மஞ்சள் மூலம் புற்றுநோய் அணுக்களை அழிக்க முடியும் என்று இந்தியாவின் சென்னையைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

உடலில் உள்ள ஆரோக்கியமான உயிரணுக்களுக்குச் சேதம் ஏற்படாமல், புற்றுநோய் அணுக்களை அழிக்கும் தன்மையுடைய மஞ்சள் மற்றும் அதில் உள்ள வேதிப்பொருளான "குர்குமின்" ஆகியவை புற்றுநோய் உயிரணுக்களை அழிக்கும் தன்மை கொண்டவை என்று சென்னையைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழு கண்டறிந்துள்ளது.

அந்த வகையில் மஞ்சள் மற்றும் "குர்குமின்" கோட்பாடுகள், புற்றுநோய் சிகிச்சையில் நல்ல பலன் கொடுக்கும் என்று கருதப்படுகிறது.

இந்த ஆராய்ச்சியைச் சென்னை ஐ.ஐ.டி. உயிரிதொழில்நுட்பத்துறையைச் சேர்ந்த பேராசிரியர் ரமா சங்கர் வர்மா தலைமையிலான குழுவினர் கண்டுபிடித்துள்ளனர். மஞ்சளில் உள்ள நச்சுத்தன்மை இல்லாத குர்குமின் குருதி மற்றும் எலும்பு மச் சைகளில் புற்றுநோயை உண்டாக்கும் "லுகிமியா" அணுக்களைத் திறம்பட அழிப்பதை ஆய்வின் மூலம் கண்டறிந்ததாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.



## கடத்தப்பட்ட தங்கம் குறித்து விசாரணை!

இந்தக் கடத்தல் தங்கம் என்பது நகைகளுக்காகக் கடத்தப்பட்டிருக்கவில்லை.

சிலபயங்கரவாதஅமைப்புகள் பணத்தைக் கையாள முடியாத நிலையில் இருக்கும் போது தங்கம் மூலமே பரிவர்த்தனைகள் நடக்கின்றன என்று கேரளாவில் கூடுபிடித்துள்ள தங்கக் கடத்தல் விவகாரம் குறித்து தேசிய விசாரணை முகமை



சிறப்பு நீதிமன்றத்தில் கூறியது.

இந்தத் தங்கக் கடத்தல் மூலம்பயங்கரவாதச்செயல்களுக்கு நிதி உதவி மேற்கொள்ளப்படுவதாகத் தாங்கள் சந்தேகப்படுவதாகத் தேசிய விசாரணை முகமை சந்தேகம்வெளியிட்டுள்ளது.

குற்றம்சாட்டப்பட்டவர் மீது சட்டவிரோதத் தடுப்புச் செயல்கள் சட்டத்தின் 16 ஆம் மற்றும் 17ஆம் பிரிவின் கீழ் குற்றம்சாட்டியுள்ளது தேசிய புலனாய்வு முகமை.

இதுபயங்கரவாதத்துக்கு நிதி உதவி அளிப்பது குறித்த குற்றத்துக்குத் தண்டனை வழங்கும்சட்டமாகும். இதையடுத்து குற்றம்சாட்டப்பட்ட ஸ்வப்னா சுரேஷ், சந்தீப் நாயார் ஆகியோரைத் தமது காவலில் எடுத்து விசாரிப்பதற்கு அனுமதி கோரியது தேசிய புலனாய்வு முகமை.

இந்த நிலையில் குற்றம் சாட்டப்பட்டவர் மீது சட்டவிரோதத் தடுப்புச் செயல்கள் சட்டம் எப்படிப் பாயும் என்று நீதிமன்றம் கேள்வி எழுப்பியது. அந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே விசாரணை அமைப்பு இவ்வாறு பதில் அளித்தது.

இந்தத் தங்கம் மூலம் கிடைத்த பணத்தின் மூலம் பயங்கரவாதச் செயல்களுக்கு நிதி கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது என்று தாங்கள் சந்தேகிக்கின்றனர் என்று தெரிவித்தனர்.

## நேபாளப் பிரதமருக்கு மனநலத்தில் பாதிப்பு!

### காங்கிரஸ் தெரிவிப்பு




உண்மையான அயோத்தி நேபாளத்தில்தான் உள்ளது, கடவுள் ராமர் ஒரு நேபாளி என்று நேபாளப் பிரதமர் கே.பி.சர்மா ஒலி கூறியதையடுத்து காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அபிஷேக் மனு சிங்வி அவரைக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இது குறித்து அபிஷேக் மனு சிங்வி மேலும் தெரிவிக்கையில், நேபாளப் பிரதமர் ஒலி யின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளது போல் தெரிகிறது.

அல்லது சீனா எழுதிக் கொடுத்ததைத் திருப்பிச் சொல்லும் கிளிப்பேச்சுப் பேசுகிறாரா, இல்லை சீனாவின் கைப்பாவையாகி விட்டாரா. முதலில் நேபாளம் இதுவரை கோராத இந்தியப் பகுதிகளைத் தங்களுடையது என்று கோரினார். இப்போது இராமர், சீதை, ராமராச்சியத்தை நேபாளத்துக்குரியது என்கிறார் என்று கடுமையாகச் சாடினார்.

## இராமன் இந்தியரல்லர் அவர் ஒரு நேபாளி!

### நேபாளப் பிரதமர் தெரிவிப்பு



உண்மையான அயோத்தி இந்தியாவில் இல்லை. அது எங்கள் நாட்டில்தான் உள்ளது என்று நேபாளத்தின் பிரதமர் கே.பி.சர்மா ஒலி தெரிவித்தார்.

கடவுளாள இராமர் இந்தியாவில் பிறந்தவர் அல்லர் என்றும் நேபாள நாட்டில் பிறந்தவர் என்றும் அதனால் அவர் ஒரு நேபாளி என்றும் நேபாளப் பிரத மர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

அயோத்தி என்பது நேபாளத்தில் பிர்குஞ் பகுதிக்கு மேற்கில் இருக்கும் சிறிய கிராமம். அங்குதான் ராமர் பிறந்தார். இந்தியாவில் உள்ள அயோத்தியில் வேண்டுமானால் சர்ச்சை இருக்கலாம். நமது அயோத்தியில் அந்தச் சர்ச்சை இல்லை என்றார். நேபாளப் பிரதமரின் இந்தக் கருத்துச் சர்சைக்குரியது என்று இந்தியத் தரப்பினர் தெரிவிக்கின்றனர். நேபாள பிரதமரின் இந்தக் கருத்துக்கு நேபாளத்திலேயே எதிர்ப்பு எழுந்துள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

#### இந்திய - நேபாள முரண்பாடு

கடந்த சில மாதங்களாக இந்தியா நேபாளம் இடையே எல்லை சார்ந்த பிரச்சினை நிலவுகிறது. 1816ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்கள் மற்றும் நேபாளத் தரப்பினரிடையே கையெழுத்திடப்பட்ட சுகாலி ஒப்பந்தத்தின் அடிப்படையில் லிம்பியாதுரா பகுதியில்தான் மகாகாளி நதியின் மூலம் இருக்கின்றது என்று எழுத்திடப்பட்டுள்ளது.

இதை ஏற்க மறுக்கும் இந்தியா, லிம்பியாதுரா மற்றும் லிபுலேக் ஆகிய பகுதிகளுக்குக் கிழக்கேதான் அந்த நதி உருவாவதாகக் கூறுகிறது. இந்த நிலையில் தமது நாட்டின் புதிய வரைபடம் தொடர்பான சட்டத்திருத்தத் திட்டத்துக்கு நேபாளத்தின் நாடாளுமன்றம் கடந்த மாதம் அனுமதி வழங்கியது.

இதனைத் தொடர்ந்து இரு தரப்புகளுக்கும் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது. நேபாள கொம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர்களுடன் சீனத் தூதர் பேச்சு நடத்தினார். இது குறித்து சில இந்திய ஊடகங்கள் போலிச் செய்திகளை வெளியிட்டன. இந்திய ஊடகங்களின் இவ்வகைப் புனையப்பட்ட, கற்பனையான செய்திகளுக்கு எதிராகச் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நேபாள அரசு தெரிவித்தது. நேபாளம் சீனாவுடன் இணைந்து தங்களுக்கு எதிராகச் செயற்படுகின்றது என்று இந்தியத் தரப்புக் கூறி வருகிறது.

## பொலிஸ் நிலையத்துக்கு சென்ற பெண் திடீர்ச் சாவு!

திருவண்ணாமலையில் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற பெண் ஒருவர் திடீரென உயிரிழந்தார்.

இது தொடர்பாகப் பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் அருகே உள்ள அந்தனூர் மதுரா கிராமத்தைச் சேர்ந்த சுதர்சனா(வயது 42) என்பவரே இவ்வாறு இறந்தவராவார்.

நிலம் தொடர்பாகக் குடும்ப உறவினர்களிடையே ஏற்பட்டிருந்த முரண்பாடு குறித்துப் பொலிஸாரிடம் தெரிவிப்பதற்காக மேல் செங்கம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றபோதே அவர் இறந்தார் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் சுதர்சனா நஞ்சு அருந்தியிருந்தார் என்றும் அவரைச் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது இறந்தார் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், சுதர்சனாவின் உறவினர்கள் மேல்செங்கம் பொலிஸார்தான் சுதர்சனா உயிர் மாய்ப்பதற்குத் தூண்டினர் என்றும் பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்திலும் அவரது உடலை வாங்குவதற்கு மறுத்து மருத்துவமனைக்கு முன்பாக அமர்ந்து ஈடுபட்டனர்.

## கொரோனா வைரஸ் சிகிச்சைக்கு மற்றொரு மருந்துக்கும் அனுமதி!

தோல் அழற்சி, சொறி, சிரங்கு ஆகியவற்றைக் குணப் படுத்துவதற்குப் பயன்படுகின்ற இடோலிசுமாப் என்ற மருந்தைக் கொரோனா நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பதற்குக் கட்டுப்படுத்தப்பட்ட அவசர காலத் தேவைக்காகப் பயன்படுத்துவதற்கு இந்திய மருந்து ஒழுங்குமுறை ஆணையகம் அனுமதியளித்தது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வருகிறது. இந்த நிலையிலேயே மேற்படி நோய்களுக்குப் பயன்படுத்துவதற்காக ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுப் பயன்பாட்டில் உள்ள குறித்த மருந்தைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்த மருந்தான இடோலிசுமாப்பை மிதமான மற்றும் கடுமையான சுவாசக் கோளாறு உள்ள கொரோனா நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப்படவுள்ளது. இந்த மருந்தை நோயாளிகளின் அனுமதியுடன் பயன்படுத்துவதற்கு இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு ஜெனரல் வி.ஜி. சோமானி அனுயளித்துள்ளார்.



# கொரோனா வைரஸ் மோசமடைகிறது சுகாதார ஸ்தாபனம் அச்சம் வெளியீடு!

கொரோனா பரவல் படுமோசமான நிலையை எட்டியுள்ளது. இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கான காலம் கண்களுக்குத் தெரியவில்லை என்று உலகச் சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

உலக நாடுகள் இந்தச் சூழ்நிலைகளை எதிர் கொள்வதற்குப் போதிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. எனவே எதிர்காலத்தில் உலகம் இயல்பு நிலைக்குத் திரும்பும் என்ற நம்பிக்கை இல்லை. வைரஸ் பரவல் படுமோசமாகி வருகிறது. எதிர்காலம் நிச்சயமற்றுள்ளது. இயல்பு நிலை திரும்புமா என்ற சந்தேகம் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது என்று உலகச் சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ராஸ் அதானம் கெப்ரியேசஸ் அச்சம் வெளியிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் - நாடுகள் வைரஸுக்கு எதிராகப் பரந் துபட்ட ஒட்டு மொத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அடிப்படைகளைச் சரியாகக் கடைப்பிடிக்கவில்லையெனில் கொரோனாத் தொற்று ஒரே பாதையில் தான் பயணிக்கும்.

மேலும் மோசமாகும். சில அரசுகள் கொரோனாத் தொற்றுப் பரவுவதைக் கட்டுப்படுத்த உறுதியான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் இந்தத் தொற்று மேலும் மோசமாகிக்கொண்டே போகும். இந்தத் தொற்றைக் குறைப்பதற்கான சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளாத நாடுகளில் அபாயகரமாகத் தொற்று அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. குறிப்பாக எந்தத் தலைவர்களெல்லாம் இதற்குக் காரணம் என்று கூற விரும்பவில்லை என்று கூறிய அவர், நிறைய நாடுகள் தவறான பாதையில் செல்கின்றன. தலைவர்கள் மாற்றி மாற்றிப் பேசுவதால், இந்தத் தொற்றைக் கட்டுக்குள் கொண்டுவரும் நடவடிக்கைகளில் மக்கள் நம்பிக்கை இழக்கிறார்கள் என்று மேலும் குறிப்பிட்டார்.



## தென் சீனக் கடலில் அதிகரிக்கிறது பதற்றம்!



தென் சீனக் கடலின் பெரும்பகுதிகளில் கடல் உரிமம் குறித்த சீனாவின் கூற்றுக்களை அமெரிக்கா நிராகரித்தது.

சீனாவின் நடவடிக்கை சீனப் பிராந்தியத்தில் பதற்றங்களைத் தூண்டுகின்றது என்றும் அமெரிக்கா விமர்சித்தது. தென் சீனக் கடலின் பெரும்பகுதி முழுவதும் தமக்குக் கடலில் உரிமை இருப்பதாகச் சீனா கூறுவது முற்றிலும் சட்டவிரோதமானது. அந்தப் பகுதியில் சீனா மேற்கொள்கின்ற கட்டுப்பாடுகள், கொடுமைப்படுத்தலாக உள்ளது என்று அமெரிக்காவின் வெளியுறவுச் செயலர் மைக் பாம்பியோ தெரிவித்தார்.

தென் சீனக் கடலில் சீனாவின் உரிமை கோரல்களை அமெரிக்கா நீண்டகாலமாக எதிர்த்தது. அந்தப் பகுதிக்குத் தனது போர்க் கப்பல்களை அமெரிக்கா தொடர்ந்து அனுப்புகிறது.

இந்த நிலையிலேயே தென் சீனக் கடலை தனது கடல் சாம்ராச்சியமாகக் கருதுவதற்குச் சீனாவை உலகம் அனுமதிக்காது என்றும் பாம்பியோ தெரிவித்தார். அமெரிக்காவின் வொஷிங்டனில் உள்ள சீனத் தூதரகம் பாம்பியோவின் இந்தக் குற்றச்சாட்டு முற்றிலும் நியாயமற்றது என்று அறிக்கை வெளியிட்டது.



கொரோனா காலத்தில் தங்களது அன்புக்குரியவர்களை அரவணைக்க முடியாதிருப்பதால் அந்தக் கவலையை நீக்குவதற்காக மரங்களைக் கட்டிப்பிடிக்கிறார்கள் இஸ்ரேல் மக்கள்.

## மண்டேலாவின் மகள் மறைவு!




தென் ஆபிரிக்காவில் இன வெறியை எதிர்த்துப் போராடி அதன் முன்னாள் அதிபராகவும் இருந்த நெல்சன் மண்டேலாவின் இளைய மகள் ஜிண்ட்சி மண்டேலா மருத்துவமனையில் காலமானார்.

2013ஆம் ஆண்டில் நெல்சன் மண்டேலாவும் 2018ஆம் ஆண்டில் அவரது மனைவி வின்னி மண்டேலாவும் காலமாகியிருந்த நிலையில் தற்போது அவர்களது இளைய மகளான ஜிண்ட்சி மண்டேலா (வயது59), ஜோகனஸ்பர்க்கில் உள்ள மருத்துவமனையில் காலமானார்.

அவரது இறப்புக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. ஜிண்ட்ஸி மண்டேலா டென்மார்க் நாட்டின் தூதராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விரைவில் நல்ல தகவல்கள் வெளியாகும் - ட்ரம்ப் தெரிவிப்பு!

அமெரிக்காவில் இதுவரை 34 லட்சத்துக்கும் மேற்பட்ட அமெரிக்கர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு லட்சத்து 37 ஆயிரத்துக்கு அதிகமானோர் இந்த நோயால் இறந்துள்ளனர்.

கடந்த ஒருவாரமாகத் தினமும் 50 ஆயிரத்தும் மேற்பட்டவர்கள் கொரோனாவால் பாதிக்கப்படுகின்றனர். இந்த நிலையில், இது குறித்து அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கூறியதாவது:- "ரஷ்யா, சீனா, இந்தியா மற்றும் பிரேசில் போன்ற பெரிய நாடுகளை விட அமெரிக்காவில் உலகின் மிகப்பெரிய கொரோனா சோதனைத் திட்டம் உள்ளது.

"அமெரிக்கா மிகக் குறைந்த இறப்பு விகிதத்தை மட்டுமே கொண்டுள்ளது. நாங்கள் சிறந்த தடுப்பூசிகளை உருவாக்கிவருகிறோம், சிகிச்சை முறைகளை மிகச் சிறப்பாகச் செய்கிறோம். விரைவில் சில நல்ல தகவல்கள் வெளிவரப் போகின்றன என்று நான் நினைக்கிறேன்" - என்றார்.

## ஹுவாவியைக் கட்டுப்படுத்த முனைகிறது பிரிட்டன் அரசு!




பிரிட்டனில் 5ஆம் தலைமுறைத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற தகவல் பரிமாற்றங்களில் சீன நிறுவனமான ஹுவாவியின் பங்கைக் கட்டுப்படுத்துவதற்குப் பிரிட்டன் அரசு முயன்று வருகிறது.

5ஆம் தலைமுறைத் தொலைத்தொடர்புத் தொழில்நுட்பத்துக்கு ஆறு மாதங்களுக்கு முன்பு பலவிதமான கட்டுப்பாடுகளுடன் பிரிட்டன் அனுமதியளித்திருந்தது. மிகநீண்டகாலதாமதங்கள் மற்றும் சட்டபூர்வமான போராட்டங்களுக்குப் பிறகு கடந்த ஜனவரி மாதத்தில் 5ஆம் தலைமுறைத் தொலைத் தொடர்புத் துறையில் ஹுவாவித் தயாரிப்புகளைப் பயன்படுத்துவதற்குப் பிரிட்டன் அனுமதித்தது.

ஆனால் ஒட்டுமொத்தச் சந்தையின் பங்கில் 35 சதவீதம் மட்டுமே ஹுவாவி நிறுவனத்தின் பொருள்கள் இருக்க வேண்டும் என்று அப்போது பிரிட்டன் கட்டுப்பாடு விதித்திருந்தது. இந்த நிலையிலேயே இப்பொழுது அதையும் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளில் பிரிட்டன் அரசு இறங்கியுள்ளது.

ஹுவாவி நிறுவனத்தின் வன்பொருள்களைப் பிரிட்டனின் முக்கியமான தகவல்களைத் திருடவோ, உளவு பார்க்கவோ, இணைய வழித் தாக்குதல் நடத்தவோ, சீனா பயன்படுத்தலாம் என்று அமெரிக்கா கூறிய நிலையில், அடுத்த ஆண்டு முதல் அந்த நிறுவனத்தின் பொருள்கள் எதையுமே பயன்படுத்தாமல் இருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளைப் பிரிட்டன் அரசு பரிசீலனை செய்து வருகின்றது என்று செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த நடவடிக்கை அமெரிக்காவின் அழுத்தம் காரணமாக எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு கடதாசியில் மதுப் போத்தல்கள்!

### மதுபான நிறுவனம் புதுவித முடிவு



கடதாசியில் தயாரிக்கப்பட்ட போத்தல்களில் மதுபானத்தை அடைத்து விற்பனை செய்யவுள்ளோம் என்று 200 ஆண்டுகள் பழமையான உலகப் புகழ் பெற்ற ஜோனி வாக்கர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி இனி இந்த நிறுவனத்தின் 'விஸ்கி' வகை மதுபானங்கள் இனிக் கடதாசிப் போத்தல்களில் விற்பனை செய்யப்படவுள்ளன. விஸ்கி தயாரிப்பு உரிமம் தற்போது உலகின் மிகப்பெரிய மதுபான விற்பனை நிறுவனமான டியாஜியோ நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

சூழலியலுக்கு இணக்கமான இந்த முயற்சியை அடுத்த ஆண்டிலிருந்து சோதனை செய்து பார்ப்பதற்கு அந்த நிறுவனம் முடிவு செய்துள்ளது. ஜோனி வாக்கர் விஸ்கிகள் பெரும்பாலும் கண்ணாடிப் போத்தல்களில் அடைக்கப்படுகின்றன. கண்ணாடிப் போத்தல்களால் கரியமில வாயு வெளியேற்றம் நிகழ்கிறது. இதனால் கடதாசியிலான போத்தல்களைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# கான்ஸ்டபிளை மோதிக் கொன்ற பின்னர் தப்பி ஓடிய டிப்பர் கண்டுபிடிக்கப்பட்டது

## காயமுற்ற இரு சார்ஜண்ட்கள் ஆஸ்பத்திரியில்



மாத்தறை ஹக்மன, கோங்கால பொலிஸ் காவலரண் பகுதியில் பொலிஸாரின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தி பொலிஸார் ஒருவரைக் கொன்று, மற்றிருவரைக் காயப்படுத்தி விட்டுத் தப்பிச்சென்ற டிப்பர் ரன்ன பிரதேசத்தில் வைத்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ரன்ன, கட்டகடுவ பிரதேசத்தில் வீடு ஒன்றுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த டிப்பர் வாகனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

நேற்றிரவு இடம்பெற்ற குறித்த விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்த நிலையில் மேலும் இரண்டு பொலிஸ் சார்ஜன்ட்கள் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

டிப்பர் வாகனத்தின் சாரதி தப்பிச் சென்றுள்ள நிலையில் அவரை கைது செய்வதற்கான விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வாக்களிப்பு நிலையம் அருகில் காணப்பட்ட தேர்தல் விளம்பரம்

## அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை



(சண்முகம் தவசீலன்)

பொதுத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் நேற்று முதல் தபால் மூல வாக்களிப்பு இடம்பெற்று வருகின்றது.

அந்த வகையில் முல்லைத்தீவு வலயக்கல்வி அலுவலக வாக்கு சாவடிக்கு அருகில் வலயக்கல்வி அலுவலகத்தின் ஊழியர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளில் வேட்பாளர் ஒருவரின் படம் மற்றும் சின்னத்துடன் கூடிய ஸ்ரிக் கர் ஒட்டிய வாறு மோட்டார் சைக்கிளை நிறுத்தி வைத்திருந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகள் சென்று அந்த விளம்பரத்தை அகற்றி மோட்டார் சைக்கிளையும் அங்கிருந்து அகற்றினர்

அத்தோடு குறித்த வாக்களிப்பு நிலையத்துக்கு முன்பாக கட்சி ஒன்றின் சின்னத்துடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் ஒன்றும் சோதனையிடப்பட்டு வாகனமும் குறித்த இடத்தை விட்டு அகற்றப்பட்டது.

அத்தோடு அந்தப் பகுதியில் சின்னம் பொறிக்கப்பட்ட 'காட்'கள் வீசப்பட்டிருந்த நிலையில் அவையும் அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வாக்களிப்பு சுமுகமாக இடம்பெற்றது.

# பேருவளை மக்கொனக் கடலில் மூழ்கி இரு சிறுமிகள் உயிரிழப்பு

பேருவளை,மக்கொன பகுதியில் கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்ட சிறுமிகள் இருவரும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இன்று செவ்வாய்க்கிழமை மக்கொன கடற்கரையில் ஒதுங்கிய நிலையில் இரு சடலங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

நேற்றையதினம் தமது நண்பர்களுடன் மக்கொன உஸ்வெல்ல கடற்கரையில் விளையாட சென்றபோது, சிறுமிகள் உட்பட நான்கு பேர் கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

கடல் அலையில் சிக்குண்ட ஏனைய இருவரை பிரதேச மக்கள் காப்பாற்றியுள்ளனர். இதனையடுத்து காணாமல்போன சிறுமிகளைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட வந்த நிலையில், அவர்கள் இருவரும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

பேருவளை கோப்பியாவத்தை பகுதியைச் சேர்ந்த பாத்திமா நிஸ்பா (15வயது), பாத்திமா நிஸ்மா (12வயது) ஆகிய சகோதரிகளின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

மற்றைய சகோதரியான பாத்திமா நிப்லா (8 வயது) பிரதேசவாசிகளால் காப்பாற்றப்பட்டிருந்தார்

இவர்கள் மூவரும் பேருவளை மாளிஹா ஹேன ரிபாய் ஹாஜியார் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# டிராக்டரில் சிக்கி குடும்பஸ்தர் சாவு

விவசாய அறுவடையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த டிராக்டர் ஒன்றில் சிக்குண்டு குடும்பஸ்தர் ஒருவர் பலியாகிய சம்பவம் ஒன்று இன்று வெல்லாவெளி பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் பலியாகியவர் 52 வயதுடையவர், வெல்லாவெளி 40 ஆம் கிராமத்தை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையாவார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சுகாதார வழிமுறைகளை பின்பற்றாதோர் சிக்குவர்

கொழும்பு, ஜுலை 14

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீண்டும் பின்பற்றுமாறு பொதுமக்களிடம் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சுகாதார வழிமுறைகளை பின்பற்றாதவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதிப் பொலிஸ்மா அதிபர், சட்டத்தரணி அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா தொற்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனத்தால் அறிவிக்கப்படும் வரை இந்த சுகாதார வழிமுறைகளை பின்பற்றுதல் அவசியம் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதற்கு முன்னர் பொதுமக்கள் வழங்கிய ஒத்துழைப்புகளை தொடர்ந்தும் எதிர்பார்ப்பதாக பிரதி பொலிஸ்மா அதிபர், சட்டத்தரணி அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

# மக்களைப் பலிகொடுத்தாவது மூன்றில் இரண்டு பெற முயற்சி

## தேர்தல் ஆணையத்திடம் முறையீடு

நாட்டில் தற்போது காணப்படும் ஆபத்தான நிலைமையில் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் எனப் பொதுமக்களின் உரிமைகளை பாதுகாக்கும் அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமான கோரிக்கை அடங்கிய கடிதம் ஒன்றை தேர்தல் ஆணையாளரிடம் இன்று கையளிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அந்த அறக்கட்டளையின் தலைவர் அசேல சம்பத் கூறியுள்ளார்.

மக்களை பலிகொடுத்தாவது மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெற வேண்டும் என்ற நோயில் பாதிக்கப்பட்டுள்ள அரசாங்கம், எப்படியான நிலைமையாக இருந்தாலும் தேர்தலை நடத்த முயற்சித்து வருகிறது.



எனினும் இப்படியான நோக்கத்திற்காக சகல மக்களின் உயிர்களையும் பலிக்கொடுக்க முடியாது. இதனால், தேர்தலை ஒத்திவைத்து, மக்களின் உயிர்களைப் பாதுகாக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்க உள்ளதாகவும் அசேல சம்பத் குறிப்பிட்டுள்ளார்.

# லஞ்சக் குற்றச்சாட்டில் பொலிஸ் அதிகாரி கைது

வர்த்தகர் ஒருவரிடம் லஞ்சம் பெற்றுக் கொண்ட குற்றத்திற்காக யக்கல பொலிஸ் நிலையப் பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா வத்துரகம பிரதேச வர்த்தகர் ஒருவருக்குக் கம்பஹா நீதிவான் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பிணை உத்தரவை இலகுப்படுத்தி எதிர்வரும் நீதிமன்ற நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித்து இந்தப் பொலிஸ் அதிகாரி 15,000 ரூபாவை லஞ்சமாக கோரியுள்ளாராம்.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய லஞ்ச ஊழல் விசாரணை பிரிவு அதிகாரிகள் அந்தப் பொலிஸ் அதிகாரியை கைது செய்துள்ளனர்.

பொலிஸ் அதிகாரி கம்பஹா பண்டாரவத்த பகுதியில் மேற்படி லஞ்சத் தொகையைப் பெற்றுக்கொண்டபோது லஞ்ச ஊழல் விசாரணை பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார் எனக் கூறப்பட்டது.

சந்தேக நபரை கொழும்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

# ரவி கருணாநாயக்கவிடமும் அர்ஜூன் அலோசியஸிடமும் வாக்குமூலம் பெறப் பணிப்பு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, அர்ஜூன் அலோசியஸ் உள்ளிட்டவர்களிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரினால் பதில் பொலிஸ் அதிபருக்கு இது தொடர்பில் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இது தொடர்பானஅறிக்கையை ஜூலை 25ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு மார்ச் 29 ஆம் திகதி மற்றும் மார்ச் 31 ஆம் திகதி இடம்பெற்ற பிணைமுறிகள் ஏலத்தின் போது நிகழ்ந்தவை எனக் கூறப்படும் மோசடிகள் தொடர்பிலேயே வாக்குமூலம் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# பொதுச்சொத்துகள், சுற்றுச்சூழலுக்கு நாசம் விளைவிக்கும் வேட்பாளர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டவேண்டும்!

## வலி கிழக்கு தவிசாளர் பகிரங்கக் கோரிக்கை

தேர்தல் பிரச்சாரத்தில் பொதுச் சொத்துக்களையும் சூழலையும் பாதுகாப்பதில் வேட்பாளர்கள் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும். பிரசாரம் என்ற போர்வையில் எமது பிரதேசத்தை நாமே அழித்துவிடக்கூடாது என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

மேலும், நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சிலர் பொதுச் சொத்துக்களை நாசம் செய்யும் வகையிலும் சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் வகையில் செயற்படுகின்றனர். இது சட்டம், ஒழுங்கு நடவடிக்கைக்கு புறம்பான காரியமும் ஆகும்.

பொது தாபனங்கள், மதில்களிலும் கண்டபடி சுவரொட்டிகளை ஒட்டுகின்றனர். பொது வீதிகளில் தமது கட்சியின் சின்னம், விருப்பு இலக்கம் போன்றவற்றை வர்ணப்பூச்சுக்கொண்டு எழுதிவிட்டுச் செல்கின்றனர்.

இதனால் வீதிகளில் கடவைக்கோடுகள் உள்ளிட்ட சமிக்ஞை கோடுகள் மறைகின்றன. உள்ளூராட்சி மன்றங்களான எமக்குச் சொந்தமான வீதிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வீதிகள், மாகாணத்திணைக்களத்திற்குச் சொந்தமான வீதிகள் என வேறுபாடின்றி நாசம் செய்யப்படுகின்றது.

இவ்வாறு எழுதப்பட்டவற்றை அழிக்கும் போது கூட அழிப்பதற்காக பயன்படும் வர்ணப்பூச்சு மீது எவராவது வழுக்கி விழவும் விபத்துக்கள் நடக்கவும் அதிகமாக சந்தர்ப்பங்கள் உள்ளன.

வீதிகளில் எழுதுவோர் பயணிகளின் உயிருடன் விளையாடுகின்றனர். எனவே அரச சொத்துக்கு இழப்பினை ஏற்படுத்தி மக்களின் வரிப்பணத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகளை நாசம் செய்வதுடன் மட்டும் நின்றுவிடவில்லை.

இதற்கு அடுத்ததாக வீதிகளின் பெயர்ப் பலகைகள், திட்டங்களின் பெயர்ப்பலகைகளை மறைத்து வேட்பாளர்களின் படங்களை ஒட்டுகின்றனர். தேர்தலில் வெற்றிபெற்று பிரதேசத்தை அபிவிருத்தி என்று அரசியலில் கூறும் சிலர் இவ்வாறு மேற்கொள்வதனால் ஒட்டுமொத்த அரசியல்வாதிகளுக்கும் அவமானமாகவும் அமைகின்றது. இவற்றில் கணிசமானவற்றினை பொலிஸார் அகற்றிவருகின்றனர்.

இவ்வாறு ஒட்டப்பட்டவற்றை அகற்றுவதற்கும் நாட்டில் பெரும் நிதிச் செலவு ஏற்படுகின்றது. வேட்பாளர்கள் தமது பிரசாரகாரருக்கு உரிய அறிவுறுத்தல்களைக் கொடுக்க வேண்டும் என உள்ளூராட்சி மன்றம் என்ற வகையில் கேட்டுக் கொள்கின்றேன்.

மக்களின் பொதுச் சொத்துக்களுக்கும் எமது சூழலுக்கும் விரோதமாகச் செயற்படும் வேட்பாளர்களை மீது சட்டம், ஒழுங்கிற்கு மேலாக மக்கள் தமது வாக்குரிமை மூலமும் தகுந்த பாடம் கற்பிக்கவேண்டும்.

நாமும் அரசியல் கட்சி சார்ந்தவர்களாக வாக்குரிமை அடிப்படையில் தெரிவாகின்ற போதும் நாமே மக்களின் விடயத்தில் பொறுப்பற்று செயற்பட்டு விட்டு மக்களின் தலைமைத்துவப் பொறுப்பினை கோருவதில் அர்த்தமில்லை.-எனவும் தெரிவித்துள்ளார்.

## கிழக்கு மாகாண ஆளுநர் அம்பாறைக்கு களவிஜயம்

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அம்பாறை மாவட்டத்திற்கான விஜயமொன்றை நேற்று திங்கட்கிழமை மேற்கொண்டிருந்தார்.

அவ்விஜயத்தின் போது அம்பாறை மாவட்ட திண்மைக்கழிவுகளை முகாமைத்துவம் செய்யும் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்குற்பட்ட அஷ்ரப் நகரில் உள்ள திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவ நிலையத்தை அவர் திறந்துவைத்தமையுடன் ஒலுவில் தென்கிழக்கு பல்கலைகழகத்திற்கு விஜயம் செய்து பல்கலைக்கழக உபவேந்தருடன் நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

தொடர்ந்தும் ஒலுவில் துறைமுகத்திற்குச் சென்ற அவர் நிலைவரங்களைக் கேட்டறிந்தமையுடன் துறைமுகத்தையும் பார்வையிட்டார்.

இவ்விஜயத்தின் போது ஆளுநருடன் , கிழக்கு மாகாண சபையின் உயரதிகாரிகள், அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரிகள் எனப் பலரும் இணைந்திருந்தனர்.

## கொரோனாத் தொற்றுப் பரவல் தொடர்பில் உண்மை நிலையை அரசு மறைக்கின்றது!

### ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார ஆதங்கம்



அரசாங்கம் கொரோனா வைரஸ் தொடர்பான உண்மைநிலையை மக்களிடமிருந்து மறைக்கின்றது என ஜே.வி.பி உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தி குற்றம்சாட்டியுள்ளது.

நாட்டில் நிலைமை வழமைக்கு திரும்பியுள்ளது எனஇ காண்பித்து அதன் மூலம் அரசியல் ஆதாயம் பெறுவதற்காக அரசாங்கம் உண்மையை மறைக்கின்றது என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

நிலைமையின் பாரதூரமான தன்மையை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டுள்ளன மக்கள் சுகாதார விதிமுறைகளை மறந்துவிட்டனர் என அவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார அதிகாரிகள் பாதுகாப்பு படையினர் மற்றும் அரசாங்கம் இணைந்து கொரோனா வைரசினைக் கட்டுப்படுத்திய போதிலும் சமூகத்தில் அளவுக்கதிகமான நடவடிக்கைகளை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்த பல நடவடிக்கைகளால் நிலைமை மேலும் மோசமானதாக மாறியுள்ளது என ஜே.வி.பியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட நோயாளிகளை விட குணமடைந்த நோயாளிகளையே அரசாங்கம் காண்பிக்க முயல்கின்றது எனக்குற்றம்சாட்டியுள்ள அவர், ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைகழகத்தின் கொவிட் 19 சோதனை அறிக்கைகளில் அரசாங்கம் மாற்றங்களை மேற்கொண்டுள்ளதால் பல்கலைகழகம் பி.சி.ஆர். சோதனைகளில் இருந்து விலகியுள்ளது என ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா வைரஸ் குறித்த உண்மை நிலையை மறைப்பதற்காக இவை அனைத்தையும் அரசாங்கம் செய்கின்றது என அவர் கூறினார்.

## ராஜாங்கனையில் பதினாறு பேருக்கு வைரஸ் தொற்று

ராஜாங்கனைப் பகுதியில், இதுவரை 16 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் பணியாற்றும் இராணுவ அதிகாரி ஒருவர் விடுமுறைக்குச் சென்றிருந்த நிலையில், அவர் மூலமே இந்தத் தொற்றுப் பரவியுள்ளதாக கூறப்படுகிறது.

இதையடுத்து, ராஜாங்கனைப் பகுதியில் பல இடங்கள் முற்றாக முடக்கப்பட்டுள்ளன.

## கடற்படைத் தளபதி பியால் டி சில்வா நாளை ஓய்வு; அட்மிரலாகத் தரமுயர்வு



கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா ஜனாதிபதியினால் இன்று முதல் அட்மிரலாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார் என்று கடற்படை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா நாளையுடன் ஓய்வு பெற உள்ளார். இந்த நிலையிலேயே அவர் அட்மிரலாக பதவி உயர்ததப்பட்டுள்ளார்.

அதேவேளை, கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா ஓய்வு பெறுவதற்கு முன்பு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுச் சந்தித்துப் பிரியாவிடை பெற்றுக் கொண்டுள்ளார்.

## வவுனியா விபத்தில் வயோதிபர் மரணம்

வவுனியா – கனகராயன்குளம் குறிசுட்ட குளம் சந்தியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் மரணமடைந்துள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றையதினம் இரவு மோட்டார் சைக்கிளில் பயணித்து கொண்டிருந்த இந்த முதியவர் ஏ9 வீதி குறிசுட்ட குளம் சந்தியில் சென்று கொண்டிருந்த போது எதிரே வருகைதந்த சைக்கிளுடன் மோதியதில் விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் புதூர் சந்தியை சேர்ந்த ஞானசேகரம் வயது 53 என்ற முதியவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார். சைக்கிளில் பயணித்த நபர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கனகராயன்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## பேசாலையில் ஒருவர் கைது!

மன்னார் - பேசாலைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்து சோதனை மேற்கொண்ட பொலிஸார் அந்த வீட்டின் உரிமையாளரைக் கைது செய்துள்ளனர்.

இவரை நீதிமன்றில் முற்படுத்திய போது விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதவான் சந்தேகத்துக்குரிய வீட்டுக்கு பாதுகாப்பு வழங்க உத்தரவிட்டார்.

பேசாலைப் பகுதியில் ஒரு வீட்டில் புலிகளின் ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்து அவ் வீட்டின் தரையை நள்ளிரவு நேரம் பொலிஸார் சோதனை செய்துள்ளனர்.

இது தொடர்பாக அப்பகுதி மக்கள் பொலிஸாருடன் முரண்பட்டமையுடன் சோதனை செய்வதற்கு நீதிமன்ற அனுமதியுள்ளதா எனவும் வினவியுள்ளனர். இதனையடுத்து இச் செயற்பாட்டை கைவிட்ட பொலிஸார் வீட்டின் உரிமையாளரை கைது செய்துள்ளனர்.

## தனியார் வைத்தியசாலை றாகமவில் மூடப்பட்டது

றாகமவில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் கொரோனா நோயாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து குறித்த வைத்தியசாலையை தற்காலிகமாக மூட சுகாதார அதிகாரிகள் இன்று நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை வைத்தியசாலையில் உள்ள ஊழியர்கள் மற்றும் நோயாளர்கள் மீது கொரோனாத் தொற்றினைக் கண்டறியும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அவர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளது.

பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் கிடைக்கும் வரை வைத்தியசாலை தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ரணிலுக்கும் மனைவிக்கும் கொரோனா பரிசோதனை!

தானும் தனது மனைவி மைத்திரி விக்கிரமசிங்கவும் கொரோனா பரிசோதனை செய்து கொண்டனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் ஸ்ரீ ஜயவர்தன புர பல்கலைக்கழகத்தில் தான் கொரோனா பரிசோதனை செய்துக் கொண்டார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இதுவரையில் தனக்கும் மனைவிக்கும் கொரோனா தொற்றவில்லை. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பரிசோதனை அறிக்கை பிழை என்றால் இன்று எனக்கு கொரோனா தொற்றியிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கேகாலையில் இடம்பெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தாங்கள் மேற்கொள்ளும் பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கைகளை பிழை என அரசாங்கம் நிராகரிப்பதாக, அந்த நடவடிக்கையில் இருந்து ஸ்ரீ ஜயவர்த்தன புர பல்கலைக்கழகம் விலகியுள்ளது.

இதேவேளை கொரோனா தொற்றிலிருந்து குணமடைவோரின் எண்ணிக்கையை அதிகரித்து காட்டும் வகையில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் வெளியிடும் பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கைகளை அரசாங்கம் வேண்டுமென்றே மாற்றியதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை அடுத்து அந்த பல்கலைக் கழகம் பி.சி.ஆர். பரிசோதனை நடவடிக்கைகளில் இருந்து விலகவிட்டதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க நேற்றுத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விமான நிலையம் இப்போதைக்கு திறக்கப்படாது!

## பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



கொழும்பு, ஜுலை14

விமான நிலையத்தை தற்போது திறக்காதிருக்கத் தீர்மானித்துள்ளதாக சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா வைரஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தை இப்போதைக்கு திறக்க வேண்டாம் எனச் சுகாதார அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

கொரோனா அச்சம் காரணமாக கடந்த மார்ச் மாதம் 17 ஆம் திகதியில் இருந்து பண்டாரநாயக சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் விமான நிலையத்தை திறக்கலாம் என விமான சேவைகள் அமைச்சர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

எனினும் கடந்த சில நாட்களில் நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் குறித்த அச்சம் ஏற்பட்டுள்ளது என்பதுடன், மக்கள் குழப்பத்தில் உள்ள நிலையில் விமான நிலையத்தை திறப்பது நாட்டுக்கு மீண்டும் நெருக்கடிகளை உருவாக்கும் எனச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தியாவில் கொரோனா வைரஸின் தாக்கம் மிகமோசமாக உள்ள நிலையில், இந்தியாவில் இருந்து ஒரு பிரஜையேனும் நாட்டுக்குள் வந்தால், இலங்கையில் நிலைமைகள் மோசமடையும் என்றும் இலங்கையர்கள் கூட இப்போது நாட்டுக்குள் வருவதில் சிக்கல்கள் உள்ளது. எனவே இப்போதைய நிலையில் விமான நிலையத்தை திறப்பது சிக்கலான விடயம் எனச் சுகாதார அதிகாரிகள் அரசை வலியுறுத்தியுள்ளனர்.

இதனையடுத்தே விமான நிலையத்தை தற்போது திறக்காதிருக்க சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

# கைதி ஒருவர் தற்கொலை

கொழும்பு, ஜுலை 14

கொரோனா வைரஸ் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நீர்கொழும்பு சிறைச்சாலையின் கைதி ஒருவர், அந்த அறிக்கை கிடைக்க முன்னர் நீர்கொழும்பு வைத்தியசாலையின் 8 ஆம் மாடியிலிருந்து குதித்ததில் உயிரிழந்தார்.

இந்த அதிர்ச்சியான சம்பவம் இன்று அதிகாலை இடம்பெற்றது. இது தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

# தேர்தல் கூட்டத்தில் கொரோனா நோயாளி!

மாத்தறை, ஜுலை 14

மாத்தறை – பிட்டபெந்தர பிரதேசத்தை சேர்ந்த இராணுவ சிப்பாய் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளார் எனத்தகவல் வெளியாகியுள்ளது.

அவர் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் சேவை செய்தவர் எனக் குறிப்பிடப்படுகின்றது.

விடுமுறைக்காக வீடு சென்றவர் ஒருவாரம் தனது வீட்டில் தங்கியிருந்துள்ளார்.

அந்தக் காலப்பகுதியில் அவர் பிட்டபெந்தர நகரத்தில் பொது மக்கள் செல்லும் பல இடங்களுக்குச் சென்றுள்ளார். அத்துடன் பொதுத் தேர்தலுக்கான அரசியல் கூட்டங்களிலும் அவர் கலந்து கொண்டிருந்தார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அவருக்கு நெருக்கமாக இருந்த 5 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# சஹ்ரானுடன் தொடர்பைப் பேணிய 6 பேர் தொடர்ந்து விளக்கமறியலில்

## கல்முனை நீதிமன்றம் உத்தரவு

சஹ்ரான் ஹாசீமுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட 6 சந்தேக நபர்களை மீண்டும் ஜுலை 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிமன்று உத்தரவிட்டது.

வழக்கு செவ்வாய்க்கிழமை அன்று அம்பாறை மாவட்டம் கல்முனை நீதிமன்ற நீதவான் ஐ.என். றிஸ்வான் முன்னிலையில் காணொலி ஊடாக விசாரணைக்காக எடுத்து கொள்ளப்பட்ட போது 6 சந்தேக நபர்களையும் மீண்டும் எதிர்வரும் ஜுலை 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த விசாரணையின் போது மேலதிக அறிக்கைகள் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்டு மீண்டும் சந்தேகநபர்கள் விசாரணைக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதி ஒன்றில் வைத்து கடந்த வருடம் மேற்குறித்த 6 சந்தேக நபர்களுடன் கைதான ஏனைய சந்தேக நபர்கள் அண்மையில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தேசிய தௌஹீத் ஜமாஅத் அமைப்பின் தலைவரான சஹ்ரான் ஹாசீம் தலைமையில் பல்வேறு இடங்களில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு அதனை தொடர்ந்து ஏப்ரல் 26 அன்று அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு தாக்குதல் சம்பவத்தின் பின்னர் குறித்த அமைப்புடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நாட்டின் நாலாபுறமும் பாதுகாப்பு தரப்பினரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை சஹ்ரானின் குழுவுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸ் பரிசோதகர் ஒருவரையும் அவரது அம்பாறை, அக்கரைப்பற்று இல்லத்தில் வைத்து கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டு அழைத்து செல்லப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற காலத்தில் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவந்த நிலையில் தற்போது அம்பாறை பொலிஸ் தலைமையக வாகன கராஜ் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வருகின்றார்.

சாய்ந்தமருது தற்கொலை குண்டு தாக்குதலில் உயிரிழந்தவர் எனத் தெரிவிக்கப்படும் மட்டக்களப்பு மாங்காடு பிரதேசத்தைச் சேர்ந்த ஸாரா என்றழைக்கப்படும் புலத்தினி தொடர்பில் மீட்கப்பட்ட சடலத்தில் மேற்கொண்ட டி.என்.ஏ. மரபணு பரிசோதனையில் அது அந்தப் பெண்ணுடையதாக பொருந்தவில்லை என்ற நிலையில், அவர் தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டுவந்த கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் அவரது சிறிய தந்தையாரை கைது செய்யப்பட்டார். அவ்விசாரணைகளின் தொடர்ச்சியாக இந்தப் பொலிஸ் பரிசோதகர் கைதானார் என்று கூறப்படுகின்றது.

## முழங்காவில் நிலையத்தில் இருவருக்குக் கொரோனா

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இன்று நடத்தப்பட்ட கொரோனா பரிசோதனையில் முழங்காவில் தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்த பாதுகாப்பு படையினர் இருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த தகவலை யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இன்றையதினம் 125பேருக்கான பரிசோதனைகள் யாழ் போதனா வைத்தியசாலை மற்றும் மருத்துவபீட ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை நேற்று நடத்தப்பட்ட பரிசோதனையில் பம்பைமடு தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்த இருவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# 9 கடற்படையினர் மாத்திரமே இன்னும் வைத்தியசாலையில்!

கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 3 கடற்படை வீரர்கள் பூரணமாக குணமடைந்து வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளனர் எனக் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, 898 கடற்படையினர் இதுவரையில் பூரணமாக குணமடைந்துள்ளனர் எனக் கடற்படைப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

மேலும் தற்போது 9 கடற்படையினர் மாத்திரமே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# கொழும்பின் புறநகர் பகுதியில் புதிதாக எவரும் அடையாளம் காணப்படவில்லை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பிலும் அதன் புறநகர் பகுதிகளிலும் கொரோனா வைரஸ் நோயாளர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில்ஜாசிங்க தெரிவித்துள்ளார்.



கொழும்பின் சில பகுதிகளில் புதிய நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சமூக ஊடகங்களில் நேற்றுத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும் இந்தத் தகவல்கள் பிழையானவை என தெரிவித்துள்ள அனில்ஜாசிங்க கொழும்பிலோ அல்லது அதன் புறநகர் பகுதியிலேயோ எந்த நோயாளியும் கண்டுபிடிக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

ராஜாங்கனையிலிருந்தும் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்துமே அதிக எண்ணிக்கை நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த அவர் கந்தக்காட்டின் ஒரு தொடர்ச்சியே ராஜாங்கனை எனவும் கூறினார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.07.2020 இல் வெளியிடப்பெற்றது.